
Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்





| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 57 | உள்ளூர் - 26.02.2026 | வியாழன் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 57 | வெளியூர் - 27.02.2026 | வெள்ளி | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


**திராவிடக் கட்சிகளோடு கூட்டணி; பிப். 28-ல்... ராமதாஸ்!**

**மாசி மகம்.. இந்த நாளில் என்ன செய்யலாம்..?**

**கௌரவ விரிவுரையாளர்களுக்கு சம்பளம் உயர்வு!**

**கோலாகலமாக நடைபெற்ற விஜய் தேவரகொண்டா- ராஷ்மிகா திருமணம்!**

## இன்ஸ்டாவில் 10 கோடி பின்தொடர்பாளர்கள்! முதல் உலகத் தலைவர் மோடி!

புதுடெல்லி, பிப். 26–

இன்ஸ்டாகிராமில் 10 கோடி பின்தொடர்பாளர்களை கடந்த முதல் உலகத் தலைவர் என்ற சாதனையைப் பிரதமர் நரேந்திர மோடி படைத்துள்ளார்.



பிரதமர் மோடிக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பைவிட இரண்டு மடங்கு அதிக பின்தொடர்பாளர்கள் இன்ஸ்டாகிராமில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2014 ஆம் ஆண்டு மெட்டாவுக்குச் சொந்தமான இன்ஸ்டாகிராம் சமூக ஊடகப் பக்கத்தில் பிரதமர் மோடி கணக்கைத் தொடங்கினார். உலக அரசியல் தலைவர்களின் பிரதமர் மோடிக்கு அடுத்ததாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் 4.32 கோடி பின்தொடர்பாளர்களை கொண்டுள்ளார்.

இந்தோனேசிய அதிபர் பிரபோவோ சுபியாந்தோவை 1.5 கோடி பேரும், பிரேசில் அதிபரை 1.44 கோடி பேரும், துருக்கி அதிபரை 1.16 கோடி பேரும், அர்ஜென்டினா அதிபரை 64 லட்சம் பேரும் பின்தொடர்கிறார்கள்.

பிரதமர் மோடிக்கு அடுத்த இடங்களில் உள்ள 5 உலக அரசியல் தலைவர்களின் மொத்த பின்தொடர்பாளர்களைவிட மோடியை அதிக பேர் பின்தொடர்கிறார்கள்.

இந்திய அளவிலும் மோடிக்கும் மற்ற அரசியல் தலைவர்களின் பின்தொடர்பாளர்களின் எண்ணிக்கைக்கும் நிறைய இடைவெளி இருக்கின்றது. உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்தை 1.61 கோடி பேரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியை 1.26 கோடி பேரும் பின்தொடர்கிறார்கள்.

## இஸ்ரேல், பாலஸ்தீனத்தின் உயரிய விருது பெற்ற ஒரே தலைவர் மோடி!

இஸ்ரேல், பிப். 26–

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன நாட்டின் உயரிய விருதைப் பெற்ற ஒரே தலைவர் என்ற பெருமையை பிரதமர் நரேந்திர மோடி பெற்றுள்ளார். இஸ்ரேல் நாட்டுக்கு இரண்டு நாள் அரசுமுறை பயணமாக புதன்கிழமை சென்ற பிரதமர் மோடி, அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றினார்.



இந்தச் சொற்பொழிவின் மூலம், இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமையை மோடி பெற்றார். அவருக்கு அந்நாட்டு நாடாளுமன்றத்தின் மிக உயரிய பதக்கம் அளிக்கப்பட்டது.

நாடாளுமன்றத் தலைவர் அமீர் ஒஹானா மோடிக்குப் பதக்கத்தை அணிவித்தார். இந்தியா–இஸ்ரேல் இடையிலான உத்திசார்ந்த உறவை வலுப்படுத்த பிரதமர் மோடி அளித்த மிகச் சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக இந்தப் பதக்கம் வழங்கப்பட்டது.

இதுகுறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள மோடி தெரிவித்திருப்பதாவது: ”நெசெட் (இஸ்ரேல் நாடாளுமன்றம்) பதக்கத்தைப் பெறுவதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். இந்த பதக்கத்தை பணிவுடனும் நன்றியுடனும் ஏற்றுக்கொள்கிறேன்.

இந்த மரியாதை ஒரு தனிநபருக்கு அளிக்கப்படும் மரியாதை அல்ல, மாறாக இந்தியாவிற்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான நீடித்த நட்புக்கு அளிக்கப்படும் மரியாதை.

இது நமது இரு நாடுகளையும் வழிநடத்தும் பகிரப்பட்ட மரியாதையை பிரதிபலிக்கிறது” எனக் குறிப்பிட்டுள்ளார்.

முதல் தலைவர்

இஸ்ரேல் நாடாளுமன்ற பதக்கத்தைப் பெற்ற முதல் உலகத் தலைவர் பிரதமர் மோடி ஆவார். மேலும், கடந்த 2018 ஆம் ஆண்டு பாலஸ்தீனம் சென்ற மோடிக்கு அந்நாட்டின் உயரிய ‘கிராண்ட் காலர் ஆஃப் தி ஸ்டேட் ஆஃப் பாலஸ்தீன்’ விருது வழங்கப்பட்டது.

இதன்மூலம் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் ஆகிய இரு நாடுகளின் உயரிய விருதைப் பெற்ற முதல் உலகத் தலைவர் என்ற பெருமை மோடிக்கு கிடைத்துள்ளது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.சு.ஸ்டாலின் தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையத்தின் சார்பில் கிழக்கு கடற்கரை சாலையில் திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை 2100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள சாலை மேம்பாலம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி, பணிகளைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.க.வேலு, சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, துணை மேயர் மு.மகேஷ்குமார், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் இரா.செல்வராஜ், தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையத்தின் உறுப்பினர் (நிர்வாகம்) தெ.பாஸ்கர பாண்டியன், தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையத்தின் உறுப்பினர் (தொழில்நுட்பம்) ஜே.தேவராஜு, சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர் நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சிலிண்டர் விலை முதல் பிஎஃப் பணம் வரை..!! மார்ச் 1 இல் அதிரடி மாற்றம்..!!

சென்னை, பிப். 26–

2026–ஆம் ஆண்டின் பிப்ரவரி மாதம் விடைபெற உள்ள நிலையில், வரும் மார்ச் 1–ஆம் தேதி முதல் சாமானிய மக்களின் அன்றாட வாழ்க்கையில் நேரடி தாக்கம் செலுத்தக்கூடிய சில முக்கிய மாற்றங்கள் அமலுக்கு வரவுள்ளன. எரிவாயு சிலிண்டர் விலை முதல் பிஎஃப் (PF) பணம் எடுக்கும் முறை வரை, இந்த மார்ச் மாதம் பல்வேறு புதிய நடை முறைகளை கொண்டுள்ளது.

**எரிவாயு சிலிண்டர் விலை மாற்றம் :**

வழக்கம் போல மாதத்தின் முதல் நாளில் எண்ணெய் நிறுவனங்கள் சமையல் எரிவாயு விலையை மறுசீராய்வு செய்ய உள்ளன. கடந்த பிப்ரவரி மாதத்தில் வணிகப் பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை கணிசமாக உயர்த்தப்பட்ட நிலையில், மார்ச் மாதத்தில் வீட்டு உபயோக சிலிண்டர் விலையில் மாற்றம் இருக்குமா? அல்லது பொதுமக்களுக்கு நிம்மதி தரும் வகையில் விலை குறைக்கப்படுமா? என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே எழுந்துள்ளது. சர்வதேச சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப இந்த விலை மாற்றம் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பிஎஃப் கணக்குதாரர்களுக்கு இனிப்பான செய்தி :**

அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதுவரை ஊழியர் வருங்கால வைப்பு நிதி (EPFO) பண த்தைப் பெறுவதற்கு நீண்ட நடைமுறைகள் இருந்த நிலையில், மார்ச் மாதம் முதல் ஒரு புரட்சிகரமான மாற்றம் அமலுக்கு வருகிறது. இனி






ஊழியர்கள் தங்கள் பிஎஃப் பணத்தை ஏடிஎம் (ATM) மையங்கள் மற்றும் யுபிஐ (UPI) செயலிகள் வாயிலாகவே நேரடியாக எடுத்துக்கொள்ளும் வசதி அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இது ஊழியர்களின் அவசரத் தேவைகளுக்கான பணப் பரிமாற்றத்தை இன்னும் எளிதாக்கும்.

**ரயில் பயணிகளுக்கான புதிய செயலி :**

ரயில் போக்குவரத்தை சார்ந்துள்ள பயணிகளுக்கு ஒரு முக்கிய எச்சரிக்கையை இந்திய ரயில்வே விடுத்துள்ளது. இதுநாள் வரை முன்பதிவு இல்லாத டிக்கெட்டுகளைப் பெறப் பயன்படுத்தப்பட்டு வந்த ‘யுடிஎஸ்’ (UTS) செயலி, மார்ச் 1, 2026 முதல் முழுமையாகச் செயல் இழக்கப் போகிறது. அதற்கு மாற்றாக, மேம்படு த்தப்பட்ட வசதிகளுடன் கூடிய ‘ரயில் ஒன்’ (Rail One) என்ற புதிய செயலி பயன்பாட்டிற்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, ரயில் பயணிகள் தடையற்ற பயணத்திற்கு இந்தப் புதிய செயலியைத் தரவிறக்கம் செய்து கொள்வது அவசியமாகிறது.

## நெல்லை, விருதுநகர், ஈரோட்டில்

# ரூ.117.65 கோடியில் மினி டைடல் பூங்கா அடிக்கல் நாட்டினார்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!




சென்னை, பிப். 26–

சென்னை தலைமைச்செயலகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி வாயிலாக நெல்லை, விருதுநகர், ஈரோட்டில் மினி டைடல் பூங்கா அமைக்க அடிக்கல் நாட்டினார். இந்த நியோ டைடல் பூங்காக்கள் அமைப்பதன் மூலம் 1,800 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அதன்படி, ஈரோடு மாவட்டம் கங்காபுரம் கிராமத்தில் ரூ.39.87 கோடியில் நியோ டைடல் பூங்கா அமைக்கப்பட உள்ளது. நெல்லை மாவட்டம் ரெட்டியார்பட்டியில் ரூ.39.06 கோடியிலும், விருதுநகர் கூரைக்குண்டு கிராமத்தில் ரூ.38.72 கோடியிலும் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்படுகின்றன.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், திருநெல்வேலி, விருதுநகர், ஈரோடு ஆகிய இடங்களில் ரூ.117.65 கோடியில் டைடல் நியோ பூங்காக்களை அமைக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் இன்று (வியாழக்கிழமை பிப். 26) அடிக்கல் நாட்டினார்..

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் திருநெல்வேலி மாவட்டம் ரெட்டியார்பட்டியில் ரூ.39.06 கோடியிலும், விருதுநகர் மாவட்டம் கூரைக்குண்டு கிராமத்தில் ரூ.38.72 கோடியிலும், ஈரோடு மாவட்டம் கங்காபுரத்தில் ரூ.39.87 கோடியிலும் மூன்று டைடல் நியோ பூங்காக்கள் அமைக்கப்படுகின்றன.

இந்தப் பூங்காக்கள் ஒவ்வொன்றும் சுமார் தலா 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் கட்டப்படவுள்ளன. ஒவ்வொன்றும் சுமார் 60,000 சதுர அடி பரப்பில் தரை மற்றும் மூன்று தளங்கள் கொண்டு ஐடி, ஐடிஇஎஸ், பிபிஓ, ஸ்டார்ட்–அப் நிறுவனங்கள் இடம்பெறும் வகையில் கட்டப்படவுள்ளன. டைடல் நியோ லிமிடெட் எனும் சிறப்பு நோக்க நிறுவனம் மூலம் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் 50,000 சதுர அடி முதல் ஒரு லட்சம் சதுர அடி கட்டுமானப் பரப்புடன் மினி டைடல் பூங்காக்களை அமைக்க தமிழ்நாடு அரசு பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

அதன்படி, விழுப்புரம், தஞ்சாவூர், சேலம், தூத்துக்குடி, திருப்பூர், வேலூர், காரைக்குடி ஆகிய இடங்களில் மினி டைடல் பூங்காக்கள் ஏற்கெனவே திறக்கப்பட்டு, வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன. மேலும், திருவண்ணாமலை, நாமக்கல் ஆகிய மாவட்டங்க ளில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்க கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன .நாகர்கோவிலில் மினி டைடல் பூங்கா அமைக்க முதல்வர் ஸ்டாலின்பிப்ரவரி 25ந்தேதி அடிக்கல் நாட்டினார். நாகை, கரூர், புதுக்கோட்டை ஆகிய பகுதிகளில் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கான அறிவிப்புகள் வெளியி டப்பட்டு, விரைவில் அவற்றின் கட்டுமானப் பணி கள் தொடங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தலையங்கம் மதுரை மணி

வியாழக்கிழமை 26.02.2026

விசுவாவசு தமிழ் வருடம்

மாசி மாதம் 14-ம் தேதி


## தங்க நகைகளில் இப்படி கூட மோசடி நடக்குதா? அது என்ன பங்களாதேஷ் ரெட் கோல்டு?




இந்தியாவில் தங்கத்தின் விலை சாமானிய மக்களுக்கு எட்டாக்கனியாக மாறியிருக்கிறது. ஒரு சவரன் நகை வாங்க வேண்டும் என்றால் கூட 1.4 லட்சம் ரூபாய் வரை தேவை. சாதாரண மக்களுக்கு ஒரு மாத சம்பளமே இது கிடையாது என்பது தான் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மை. இந்தியாவில் தங்கம் விலை ஜனவரி மாதத்தில் புதிய உச்சங்களைத் தொட்டது. பிப்ரவரி மாதத்தில் ஏற்ற இறக்கத்துடன் இருந்து வருகிறது.

தங்கத்தின் விலை உயர்ந்து இருக்கக்கூடிய இந்த நிலையில் தான் சந்தையில் போலி தங்க நகைகள் வரத் தொடங்கி இருப்பதாக ஒரு தகவல் வெளியாகியிருக்கிறது. அதுவும் உண்மையான தங்கத்தை போலவே காட்சி தரக்கூடிய பங்களாதேஷ் ரெட் கோல்ட் இந்திய சந்தையில் தற்போது அதிகமாக பரவ தொடங்கி இருக்கிறதாம்.

பங்களாதேஷ் ரெட் கோல்ட் என்பது உண்மையான தங்கம் கிடையாது. செம்பு, நிக்கல் போன்ற உலோக கலவைகளை சேர்த்து உருவாக்குகிறார்கள். பார்ப்பதற்கு இது உண்மையான தங்கத்தை போலவே இருக்கும். ஆனால் உண்மையில் இது தங்கமே கிடையாது. அத்தனை எளிதாக இது ஒரு போலி நகை அல்லது ஒரு போலி தங்கம் என நம்மால் கண்டுபிடித்து விட முடியாது.

இதுதான் தற்போது இந்திய சந்தையில் அதிகமாக வரத் தொடங்கி இருக்கிறதாம். எனவே பொதுமக்கள் குறைந்த விலையில் தங்கம் கிடைக்கிறது என நம்பி சென்று இது போன்ற போலி நகைகளை வாங்கி ஏமாந்து விடக்கூடாது. எப்போதுமே நீங்கள் நகை வாங்கும் போது அந்த நகையில் ஹால்மார்க் குறியீடு இருக்கிறதா என்பதை சரி பார்க்க வேண்டும்.

இந்திய அரசாங்கம் ஒவ்வொரு தங்க நகையையும் ஆய்வு செய்து அது தூய்மையான தங்கம் தான் என்பதற்கு வழங்கக்கூடிய குறியீடு தான் HUID எனப்படும் ஹால்மார்க் குறியீடு, இந்த குறியீடு இருந்தால் மட்டுமே அந்த நகையை வாங்குங்கள் என அரசு தெரிவிக்கிறது. அதே போல நகை வாங்கும் முன்பு அந்த கடையின் நம்பகத்தன்மையையும் கவனிக்க வேண்டும்.

தங்கம் விலை உயர்ந்துவிட்ட சூழலில் குறைந்த விலைக்கு தருகிறோம், செய்கூலி சேதாரம் இல்லாமல் தருகிறோம், ஜிஎஸ்டி இல்லாமல் நகை வாங்கலாம் என ஆசை வார்த்தை கூறினால் அவர்களை நம்பாதீர்கள். அது போலி நகையாக கூட இருக்கலாம். ஏமாந்துவிட்டால் கையில் இருக்கும் மொத்த பணமும் காலி. எனவே எப்போது நகை வாங்கினாலும் நம்பகத் தன்மை கொண்ட கடையில் வாங்க வேண்டும், நகையில் உள்ள ஹால்மார்க் குறியீட்டை பார்க்க வேண்டும், குறிப்பாக நகை வாங்கியதற்கு உரிய ரசீதை பெற வேண்டும். அதில் நகையின் எடை, விலை, ஜிஎஸ்டி, ஆகிய விவரங்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.


**TAMIL NADU CIVIL SUPPLIES CORPORATION**
**PUDUKKOTTAI REGION**

Office of the Regional Manager,
No: 1, Kalyanaramapuram I-st street, Thirukokarnam,
Pudukkottai622002

Ph.No.9443101720 Email id.: tncscpdk@nic.in

**CIN: U15137TN1972SGC006157**

**SHORT E-TENDER NOTICE**

**No.: T1/002819/2025/TNCSC/25-26** **Dated: 25.02.2026**

i) Online Short E-TENDER is invited for Purchase of 25,000 Numbers of New Cut Stones as per the Specifications to be delivered at THULAIYANUR SEMI COVERED AND ALIYANILAI SEMI COVERED Godowns Pudukkottai District and

ii) Online Short E-TENDER is invited for Purchase of 800 Mts of New Casuarina Poles as per the Specifications to be delivered at THULAIYANUR SEMI COVERED AND ALIYANILAI SEMI COVERED Godowns Pudukkottai District.

**(NOT TRANSFERABLE)**

Complete Short e-Tender document can be viewed for the above both items and the can be downloaded through URL: www.tntenders.gov.in/nicgep/app from 27.02.2026 @ 11.00AM The bidders have to participate online bidding only with Digital Signature Certificate (DSC) of Class-II or Class-III and the bidders may participate any one or both of the tenders separately as per their willingness.

| | |
|---|---|
| Document download start Date Time | : 27.02.2026 @11.00 AM |
| Last Date & Time for Submission of Bid | : 05.03.2026 @ 11.30 AM |
| Date & Time of Opening of Bid | : 06.03.2026, Time : 11.30 AM |
| Date & Time of Pre-Bid Meeting | : 02.03.2026, at 11.00 AM in the Office of the TNCSC, Pudukkottai Region. |
| (i) Earnest Money Deposit for Cut Stones | : Rs.25,000/- (Rupees Twenty Five Thousand only) Payment of EMD by online |
| (ii) Earnest Money Deposit for Casuarina Poles | :Rs.1,20,000/- (Rupees One Lakh Twenty Thousand only) Payment of EMD by online |

**RM, TNCSC**
Pudukkottai Region

வெ.ஆ.எண்: 17/2026/ செ.ம.தொ.அ/ புதுக்கோட்டை/ நாள்: 25.02.26.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்" "சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"


## வாகன ஓட்டிகளுக்கு குட்நியூஸ்.. ரூ. 340 பாஸ்?

சென்னை, பிப். 26–

உங்கள் வீடு சுங்கச்சாவடியிலிருந்து 20 கி.மீ தொலைவில் இருந்தால் இந்த சிறப்பு பாஸ் பெறலாம். இந்த பாஸ் பெற்ற பிறகு, சுங்கச்சாவடியைக் கடக்க நீங்கள் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. மாதத்திற்கு ரூ. 340 செலுத்தினால் போதும். எனவே நீங்கள் எந்த கட்டணமும் செலுத்தாமல் உங்கள் வாகனத்தை டோல் பிளாசா வழியாக ஓட்டலாம். ரூ.340 மாதாந்திர




**டோல் பாஸைப் பெறுவதற்கான விதிகள்:**

இந்த சிறப்பு டோல் பிளாசா பாஸைப் பெற, உங்கள் வீடு டோல் பிளாசாவிலிருந்து 20 கி.மீ.க்குள் இருக்க வேண்டும். இந்த வசதி தனியார் வாகனங்களுக்கு மட்டுமே கிடைக்கிறது. டாக்ஸிகள் அல்லது வணிக வாகனங்கள் இந்த விலக்குக்கு தகுதியற்றவை. ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறை டோல் பிளாசாவைக் கடக்க வேண்டியவர்களுக்கு இந்த பாஸ் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**இந்த பாஸை**

**எப்படிப் பெறுவது?**

உங்கள் வீடு டோல் பிளாசாவிலிருந்து 20 கி.மீ.க்குள் இருந்தால் இந்த பாஸை எளிதாகப் பெறலாம்.

நீங்கள் டோல் பிளாசாவில் விண்ணப்பிக்க வேண்டும்.

அதன் பிறகு உங்கள் ஆதார் அட்டை, மின்சார பில் அல்லது ரேஷன் கார்டைப் பயன்படுத்தி உங்கள் வீட்டு முகவரியைச் சரிபார்க்க வேண்டும். பின்னர் நீங்கள் ரூ.340 மட்டுமே டெபாசிட் செய்ய வேண்டும்.

ரூ.340 டெபாசிட் செய்த பிறகு உங்கள் மாதாந்திர பாஸ் உருவாக்கப்படும்.

தினமும் சுங்க வரி செலுத்துவது பலருக்கு நிதிச் சுமையாகிறது. உதாரணமாக, ஒருவர் தினமும் ரூ.60ரூ.100 சுங்கக் கட்டணமாக செலுத்த வேண்டியிருந்தால், இந்தத் தொகை மாதத்திற்கு ரூ.2,000ரூ.3,000 வரை எட்டக்கூடும். இதுபோன்ற சூழ்நிலையில், ரூ.340 மாதாந்திர பாஸ் மிகவும் மலிவு மற்றும் வசதியான விருப்பமாகும். சுங்கக் கட்டணச் சாவடிகள் வரி வசூலிப்பது மட்டுமல்லாமல், பயணிகளுக்கு சில இலவச சேவைகளையும் வழங்குகின்றன என்பது குறிப்பிட த்தக்கது. பலர் இந்த சேவைகளைப் பற்றி அறியாததால் அவற்றைப் பயன்படுத்துவதில்லை.

சுங்கக் கட்டணச் சாவடிகளுக்கு அருகில் சிறிய வாகன நிறுத்துமிடங்கள் உள்ளன. நீங்கள் அங்கு நிறுத்தலாம். இருப்பினும், இந்த பகுதிகளில் வாகனங்களை நீண்ட நேரம் நிறுத்தக்கூடாது. அவ்வாறு செய்வது போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்தக்கூடும். சுங்கக் கட்டணச் சாவடிகளில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனி கழிப்பறைகள் உள்ளன. இவற்றை இலவசமாகப் பயன்படுத்தலாம். வாகனம் ஓட்டும்போது யாராவது நோய்வாய்ப்பட்டால், சுங்கச்சாவடிகளில் முதலுதவி கிடைக்கும். இது உயிர்களைக் காப்பாற்றும்.

கூடுதலாக, விபத்துகள் அல்லது மருத்துவ அவசரநிலைகள் ஏற்பட்டால், சுங்கச்சாவடிகளில் இலவச ஆம்புலன்ஸ் சேவை கிடைக்கிறது. உங்கள் வாகனம் பழுதடைந்தாலோ அல்லது விபத்தில் சிக்கினாலோ, சுங்கச்சாவடியில் இலவச கிரேன் சேவையையும் பெறலாம். மேலும், உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், ஒவ்வொரு சுங்கச்சாவடியிலும் ஒரு ஹெல்ப்லைன் எண் வழங்கப்படுகிறது. உதவி பெற இந்த எண்ணை அழைக்கலாம்.

## AI தரவு வெடிப்பை சமாளிக்க WD-யின் புதிய மேம்பட்ட ஸ்டோரேஜ் தீர்வுகள்!

சென்னை பிப். 26–

வெஸ்டர்ன் டிஜிட்டல் நிறுவனம் தனது புதிய "WD" அடையாளத்துடன், வாடிக்கையாளர் தேவைகளை மையமாகக் கொண்ட அதிநவீன சேமிப்பு தீர்வுகளை அறிமுகப்படுத்தியுள்ளது. உலகின் மிக உயர்திறன் கொண்ட 40 டெராபைட் அல்ட்ரா எஸ் எம் ஆர் ஈபிஎம்ஆர் ஹார்டு டிஸ்க் தற்போது ஹைப்பர்ஸ்கேல் தரச் சோதனையில் உள்ளது; இதன் பெருமளவு உற்பத்தி 2026ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் தொடங்கும். மேலும், ஹாமர் தொழில்நுட்பத்தின் மூலம் 60 டெராபைட் முதல் 100 டெராபைட் மேற்பட்ட சேமிப்பு இலக்கை 2029க்குள் அடைய நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

அதிகரித்து வரும் செயற்கை நுண்ணறிவு தரவு தேவைகளை சமாளிக்க, இருமடங்கு பேண்ட்விட்த் வழங்கும் உயர் பேண்ட்விட்த் டிரைவ் தொழில்நுட்பம், இருமடங்கு உள்ளீடு–வெளியீடு செயல்திறன் தரும் இரட்டை பிவட் வடிவமைப்பு மற்றும் 20 சதவீதம் குறைந்த மின் நுகர்வு கொண்ட பவர்–ஆப்டிமைஸ் செய்யப்பட்ட ஹார்டு டிஸ்குகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இத்தொழில்நுட்பங்கள் தற்போதைய 3.5 அங்குல அளவிலேயே அதிக திறன், மேம்பட்ட செயல்திறன் மற்றும் குறைந்த மொத்த செயல்பாட்டு செலவை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்தியா, மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்காவுக்கான விற்பனை இயக்குநர் ஒவைஸ் முகமது கூறுகையில், செயற்கை நுண்ணறிவு காலத்தில் உயர்திறன் கொண்ட ஹார்டு டிஸ்குகள் தரவு மையங்களின் முதுகெலும்பாக மாறியுள்ளன என்றார்.

ஹைப்பர்ஸ்கேல் நிறுவனங்கள் மட்டுமின்றி சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கும் குறைந்த செலவில் விரிவாக்கக்கூடிய சேமிப்பு வசதிகளை வழங்கும் நோக்கில் 2027ஆம் ஆண்டு திறந்த பயன்பாட்டு இடைமுகம் அடிப்படையிலான மென்பொருள் தளம் அறிமுகமாகும் என்றும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## மல்லாங்கிணறு அரசு சுகாதார நல நிலையத்தின் இரண்டு கட்டிடங்கள் ONGC - CSR ஆதரவுடன் புதுப்பிக்கப்பட்டன!

சென்னை, பிப். 26–

விருதுநகர் மாவட்டம் மல்லாங்கிணறு அரசு சுகாதார நல நிலையத்தின் வெளிநோயாளர் (OP) வார்டு மற்றும் பிரசவ வார்டு ஆகிய இரண்டு கட்டிடங்கள், Oil and Natural Gas Corporation (ஓ.என்.ஜி.சி.) நிறுவனத்தின் சமூக பொறுப்பு (CSR) நிதி ஆதரவுடன் புதுப்பிக்கப்பட்டு 20 பிப்ரவரி 2026 அன்று திறந்து வைக்கப்பட்டன. சுமார் 20,000 விவசாயம் சார்ந்த மக்களுக்கு சேவை வழங்கும் இந்த நிலையம், 2024 நவம்பர் மாத கனமழையால் கடுமையான நீர் கசிவு மற்றும் கட்டிட சேத த்தால் பாதிக்கப்பட்டிருந்தது. விருதுநகர் மாவட்ட ஆட்சியர் மரு. சுகபுத்ரா IAS அவர்களின் ஆதரவுடனும், ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தின் நிதி உதவியுடனும், Anbalaya Foundation (அன்பாலயா




அறக்கட்டளை) புதுப்பிப்பு பணிகளை மேற்கொண்டது. சேதமடைந்த மொட்டை மாடி மற்றும் சுவர்கள் சீரமைக்கப்பட்டு, கட்டிடங்கள் முழுமையாகப் புதுப்பி க்கப்பட்டன. ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தின் மேற்பார்வை பொறியாளர் திரு. சந்தோஷ் குமார் மற்றும் தலைமை மேலாளர் (மனிதவள மேம்பாடு) திரு. ரஞ்சித் விராலி முருகேசன் ஆகியோர் புதுப்பிக்கப்பட்ட கட்டிடங்களை திறந்து வைத்தனர். மல்லாங்கிணறு பிளாக் மருத்துவ அதிகாரி திரு. டி. ராஜேஷ் கண்ணன் MBBS தலைமை தாங்கிய நிகழ்வில், அன்பாலயா அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் திருமதி சர்மிளா மற்றும் அறங்காவலர் திரு. திருஞானம் ஆகியோர் நிகழ்வை ஒருங்கிணைத்தனர். புதுப்பிக்கப்பட்ட கட்டிடங்கள் திறப்பு விழா நாளிலிருந்தே பொதுப் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன.

## டிசிஐ ஃப்ளையிங் வேல்ஸ் கூட்டாண்மை: இந்தியாவில் ஒருங்கிணைந்த சரக்கு கையாளுதலுக்கு புதிய தொழில்நுட்ப முன்னேற்றம்!


சென்னை, பிப். 26–

இந்திய போக்குவரத்து கழகம் லிமிடெட் (டிசிஐ) மற்றும் Flying Whales நிறுவனங்கள், இந்தியாவில் ஒருங்கிணைந்த சரக்கு கையாளுகை தீர்வுகளை வலுப்படுத்துவதற்கான மூலோபாய ஒத்துழைப்பு அறிவித்துள்ளன. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், Emmanuel Macron மற்றும் Narendra Modi ஆகியோரின் அதிகாரப்பூர்வ உச்சி மாநாட்டை ஒட்டி கையெழுத்தானது. டிசிஐ நிர்வாக இயக்குநர் திரு. வினீத் அகர்வால் மற்றும் ஃப்ளையிங் வேல்ஸ் தலைவர் திரு. செபாஸ்டியன் பூகோன் முன்னிலையில் ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்டது.




இந்த கூட்டாண்மை மூலம், 60 டன் வரையிலான கனரக சரக்குகளை சுமக்கும் திறன் கொண்ட 'LCA60T' ஏர்ஸ் தொழில்நுட்பத்தை இந்தியாவில் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தரைவழி உள்கட்டமைப்பு இன்றி வானில் நிலையாக மிதந்து சரக்குகளை ஏற்றி இறக்கும் இந்த தொழில்நுட்பம், தொலைதூர பகுதிகளில் குறைந்த கார்பன் வெளியீடு டன் சரக்குகளை கொண்டு செல்ல உதவும். இதன் மூலம் புதிய தளவாடத் தீர்வுகள் மற்றும் விநியோகச் சங்கிலி மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

டிசிஐ நிர்வாக இயக்குநர் வினீத் அகர்வால் கூறுகையில், "இந்த ஒத்துழைப்பு அதிநவீன, சுற்றுச்சூழல் நட்பு தீர்வுகளை வழங்க உதவும்," என்றார். ஃப்ளையிங் வேல்ஸ் தலைவர் செபாஸ்டியன் பூ கோன் கூறுகையில், "டிசிஐயுடன் இணைவது எங்கள் சர்வதேச விரிவாக்கத்தில் முக்கிய படியாகும்; இந்தியாவின் தொலைதூர பகுதிகளுக்கும் 60 டன் சரக்குகளை குறைந்த சுற்றுச்சூழல் பாதிப்பு கொண்டு செல்லும் தீர்வை வழங்க முடியும்," என்றார்.



## முப்பத்து முக்கோடி தேவர்கள் பூமிக்கு வரும் நாள்.. மாசி மகம்.? இந்த நாளில் என்ன செய்யலாம்..?





மாதத்தின் முழு நிலவு தினமான பௌர்ணமியும், மகம் நட்சத்திரமும் கைகோர்க்கும் 'மாசி மகம்' திருநாள், ஆன்மீக ரீதியாக பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. வானியல் மற்றும் சாஸ்திர விதிகளின்படி, சந்திர பகவான் சிம்ம ராசியில் சஞ்சரிக்கும் இந்த வேளையில், 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குரு பகவானும் மகம் நட்சத்திரத்திற்குள் நுரைக்கும் நிகழ்வையே நாம் 'மகாமகம்' எனப் போற்றிக் கொண்டாடுகிறோம். ராஜ வம்சத்தினர் மற்றும் பேரரசர்கள் பிறக்கும் நட்சத்திரமாக மகம் கருதப்படுவதால், இந்த நாளுக்குத் தனித்துவமான தெய்வீக களை உண்டு.

**பூமிக்கு வரும் தேவர்கள் :**

ஐதீகத்தின்படி, மாசி மகம் அன்று முப்பத்து முக்கோடி தேவர்களும், மறைந்த நம் முன்னோர்களான பித்ருக்களும் மேல் உலகத்திலிருந்து பூமிக்கு வருவதாக நம்பப்படுகிறது. பூமியில் உள்ள புண்ணிய நதிகளில் நீராடி தங்கள் பாவங்களைப் போக்கிக்கொள்ள அவர்கள் வருவதால், அன்றைய தினம் நீர்நிலைகளில் தெய்வீக ஆற்றல் கரைபுரண்டு ஓடும். அந்தப் புனித நேரத்தில் நாமும் ஏரி, குளம் அல்லது ஆறுகளில் நீராடினால், நம்முடைய தீவினைகள் நீங்கி இறையருள் கிட்டும் என்பது பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. இதன் காரணமாகவே, தமிழகத்தின் முக்கியக் கடற்கரைகள் மற்றும் நீர்நிலைகளில் லட்சக்கணக்கான பக்தர்கள் அன்று தீர்த்தவாரி மேற்கொள்கின்றனர்.

மாசி மகத்தின் மற்றுமொரு சிறப்பு 'தீர்த்தவாரி' உற்சவமாகும். அன்று ஊர் ஏங்கும் உள்ள ஆலயங்களின் உற்சவ மூர்த்திகள் பல்லக்குகளில் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு, கடல் அல்லது நதிக்கரைகளில் எழுந்தருளுவார்கள். சில இடங்களில் ஒரே நீர்நிலையில் பல ஊர் தெய்வங்கள் சங்கமிக்கும் அபூர்வ நிகழ்வும் அரங்கேறும். சுவாமிக்கு நீர்நிலைகளில் அபிஷேகம் மற்றும் நீராடல் நடைபெறும் அதே வேளையில், பக்தர்களும் நீரில் மூழ்கித் தங்களின் வேண்டுதல்களை முன்வைப்பார்கள். இது பாவங்களை வேரறுக்கும் ஒரு மகத்தான ஆன்மீக சடங்காகப் பார்க்கப்படுகிறது.

பொதுவாக ஒரு விசேஷ நாள் என்பது ஒரு குறிப்பிட்ட தெய்வத்திற்குரியதாக இருக்கும். ஆனால், மாசி மகம் அனைத்துத் தெய்வங்களின் அருளாசியும் ஒருங்கே கிடைக்கும் நாளாகத் திகழ்கிறது. வருண பகவானுக்குச் சிவன் சாப விமோசனம் அளித்ததும், முருகப் பெருமான் சிவனுக்கு மந்திர உபதேசம் செய்ததும் இந்த நாளில்தான். மேலும், பார்வதி தேவி தாட்சாயணியாக அவதரித்ததும், பெருமாள் வராக அவதாரத்தில் பூமியை மீட்டதும் இதே தினத்தில் நிகழ்ந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. திருவண்ணாமலையை ஆண்ட வாரிசு இல்லாத வல்லால மன்னருக்கு, அண்ணாமலையாரே மகனாக வந்து இறுதிச்சடங்கு செய்து முக்தி அளித்ததும் இந்த மாசி மகத்தில்தான் என்பது கூடுதல் சிறப்பு.

மகம் நட்சத்திரம் பித்ருக்களோடு நெருங்கிய தொடர்புடையது என்பதால், இந்நாளில் வழிபாடு செய்வது பித்ரு தோஷங்களை நீக்க உதவும். முன்னோர்களின் ஆசி கிடைப்பதன் மூலம் குடும்பத்தில் சுப காரியங்கள் தடையின்றி நடக்கும். ராகு, கேது மற்றும் காலசர்ப்ப தோஷங்களால் பாதிக்கப்பட்டவர்கள், மாசி மகத்தன்று மேற்கொள்ளும் பரிகாரங்கள் விரைவான பலனைத் தரும். முக்தியைத் தரும் இந்த நன்னாளில் விரதமிருந்து முறைப்படி வழிபடுவது, நம் வாழ்வின் தடைகளைத் தகர்த்து வெற்றியைத் தரும் என ஆன்மீகப் பெரியோர்கள் அறிவுறுத்துகின்றனர்.

## பாஜக சார்பில் தெருமுனைப் பிரச்சாரம்!






திருப்பூர், பிப். 26–

பாரதிய ஜனதா கட்சி திருப்பூர் வடக்கு மாவட்டம் மாவட்ட தலைவர் சீனிவாசன் வழிகாட்டுதலின்படி நெருப்பெரிச்சல்

மண்டல் சார்பாக வார்டு எண் 6.7. ஆகிய இரண்டு இடங்களில் தெருமுனைப் பிரச்சாரம் மண்டல தலைவர் உதயகுமார் தலைமையில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட பொதுச் செயலாளர் கலாமணி மற்றும் மாவட்ட செயலாளர் ராம்குமார் கலந்து

கொண்டு பாரதிய ஜனதா கட்சி தமிழ்நாடு கொண்டு வந்த திட்டங்களை பற்றி பொதுமக்களிடையே எடுத்துரைத்தனர்

இந்த தெருமுனை பொதுக்கூட்டத்தில் நிர்வாகிகள் 6 வது வார்டு சார்பில் சிவக்குமார். ராபர்ட்.7 வது வார்டு சார்பில்.பிரகாஷ். கேசவன்.அதிமுக சார்பில் பகுதி செயலாளர் வேலுமணி. அம்மா மக்கள் முன்னேற்றக் கழக மாவட்ட துணைச் செயலாளர் சுபம் வீர கந்தசாமி. பாட்டாளி மக்கள் கட்சி மாவட்ட பொறுப்பாளர் செல்வி மற்றும் சக்தி கேந்திர பொறுப்பாளர் சிவன்ராஜ், அவிநாசியப்பன், சுதாகர், பிரகாஷ் நெருப்பெரிச்சல் மண்டல் நிர்வாகிகள் சக்தி கேந்திர பொறுப்பாளர்கள் பொதுமக்கள் பங்கேற்றனர்.




## மார்பு வலி மட்டும் இல்லை.. இவையும் மாரடைப்பின் அறிகுறிகள்தான்..!



மாரடைப்பின் முக்கிய அறிகுறிகளில் ஒன்று மார்பு வலி. பாதிக்கப்பட்டவர்களுக்கு மாரடைப்பு ஏற்படுவதற்கு முன்பு மார்பு வலி ஏற்படுகிறது. இருப்பினும், பலர் நெஞ்சு வலி ஏற்படும் போதெல்லாம், அது மாரடைப்பின் அறிகுறி என்று அஞ்சுகிறார்கள். இருப்பினும், மாரடைப்பின் போது முதலில் தோன்றும் ஒரே அறிகுறி இதுவல்ல என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். உடலில் மற்ற நுட்பமான அறிகுறிகள் தொடங்கிய பிறகு இந்த நிலை தீவிரமாகும்போது மார்பு வலி ஏற்படுகிறது என்பதை அவர்கள் தெளிவுபடுத்துகிறார்கள். நெஞ்சு வலிக்கு முன்பு உடலில் மாரடைப்பு அறிகுறிகள் என்ன என்பதை பார்க்கலாம்...

**அசாதாரண சோர்வு:**

மாரடைப்பின் எச்சரிக்கை அறிகுறிகளில் ஒன்று 'அசாதாரண சோர்வு'. பலர் இந்த அறிகுறியை புறக்கணிக்கிறார்கள். உடல் செயல்பாடுகளுக்குப் பிறகு அதை சோர்வு என்று தவறாக நினைக்கிறார்கள். இருப்பினும், சிறிய வேலைகளைச் செய்யும்போது கூட நீங்கள் சோர்வாக உணர்ந்தால் கவனமாக இருக்க வேண்டும். குளித்தல், சமைத்தல் மற்றும் சிறிது நேரம் நடப்பது போன்ற எளிய பணிகள் கூட உங்களை சோர்வடையச் செய்யலாம். இதயம் போதுமான இரத்தத்தை பம்ப் செய்வதில் சிரமப்படுவதால் உடலுக்கு குறைந்த ஆற்றல் கிடைக்கிறது. இது உங்களை சோர்வாக உணர வைக்கிறது. அதனால்தான் இந்த அறிகுறி இதய நோயின் ஆரம்ப அறிகுறி என்று அழைக்கப்படுகிறது.

**உடல் பாகங்களில் வலி:**

இதயம் தொடர்பான வலி எப்போதும் மார்பில் இருக்காது. இது தாடை, கழுத்து, தோள்கள், மேல் முதுகு அல்லது இடது கையில் உணரப்படலாம். சில நேரங்களில் அது வலியை விட அழுத்தம், எரிதல் அல்லது இறுக்கம் போன்ற உணர்வுகளை ஏற்படுத்துகிறது. இதய வலி நரம்புகள் வழியாக பயணிக்கும்போது உடலின் மற்ற பகுதிகளுக்கும் பரவக்கூடும். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், பல் மருத்துவர்கள் மற்றும் எலும்பியல் நிபுணர்களை அணுகி மதிப்புமிக்க நேரத்தை வீணாக்கக்கூடாது.

**செரிமான அசௌகரியம்:**

செரிமான மண்டலத்தில் அசௌகரியம், அஜீரணம், வீக்கம், குமட்டல் மற்றும் வயிற்று வலி ஆகியவை இதயப் பிரச்சினையின் அறிகுறிகளாகும். ஆரோக்கியமான உணவை சாப்பிட்ட பிறகும் நீங்கள் இவ்வாறு உணர்ந்தால், அதை அமிலத்தன்மை பிரச்சனையாக தவறாகக் கருதக்கூடாது. இந்த அறிகுறி பெண்களில் அதிகம் காணப்படுகிறது.

**மூச்சுத் திணறல்:**

கடுமையான உடற்பயிற்சி அல்லது ஓடுதலுக்குப் பிறகு மூச்சுத் திணறல் பொதுவானது. இருப்பினும், படுத்துக் கொள்ளும்போது, படிக்கட்டுகளில் ஏறும்போது அல்லது சத்தமாகப் பேசும்போது மூச்சுத் திணறல் இதயப் பிரச்சினைகளின் அறிகுறியாக இருக்கலாம். இதயம் இரத்தத்தை திறம்பட பம்ப் செய்ய முடியாமல், நுரையீரலில் திரவம் சேரும்போது இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. எடை அதிகரிப்பு அல்லது உடற்பயிற்சி இல்லாததால் ஏற்படும் பிரச்சனையாக இதை கருதக்கூடாது.

**இவற்றில் அடங்கும்:**

தலைச்சுற்றல், மயக்கம், திடீர் வியர்வை மற்றும் குளிர் உணர்வு ஆகியவை மாரடைப்புக்கான எச்சரிக்கை அறிகுறிகளாகும். இந்த அறிகுறிகள் மூளைக்கு இரத்த ஓட்டம் குறைவதால் ஏற்படுகின்றன. அவற்றை நீரிழப்பு அல்லது பதட்டம் என்று நிராகரிக்கக்கூடாது.

**கவனம் அவசியம்..:**

இதய நோய் தொடர்பான எச்சரிக்கை அறிகுறிகளில் கவனம் செலுத்துங்கள். திடீரென சகிப்புத்தன்மை இழப்பு, 40 வயதிற்குப் பிறகு புதிய அறிகுறிகள் போன்ற விஷயங்களில் கவனம் செலுத்துங்கள். மன அழுத்தம் அல்லது செயல்பாட்டின் போது தோன்றும் அறிகுறிகள் மற்றும் ஓய்வெடுத்தாலும் குறையாத அசௌகரியம் இதய நோயின் அறிகுறிகளாகும்.

**இவற்றைப் பின்பற்றுவது நல்லது:**

சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது இதய நோய் அபாயத்தைக் குறைக்கும். வழக்கமான இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை பரிசோதனைகள், புகைபிடித்தல் மற்றும் மது அருந்துவதைத் தவிர்ப்பது, குறைந்தது 30 நிமிடங்கள் தொடர்ந்து நடப்பது அல்லது உடற்பயிற்சி செய்வது, போதுமான தூக்கம் பெறுவது மற்றும் தியானம் செய்வது இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.

# உறுதியாகாத தி.மு.க. கூட்டணி.. சென்னை வரும் ராகுல் காந்தி.. த.வெ.க.வுடன் பேச்சுவார்த்தையா..?



சென்னை, பிப். 26–

கடந்த ஜனவரி மாதமே ராகுல் காந்தி சென்னை வருவதாக இருந்த நிலையில் கூட்டணி உறுதி செய்யப்படாததால் அந்த திட்டமிடல் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த நிலையில் கூட்டணி பேச்சுவார்த்தை இன்னும் முடிவடையாத நிலையில் நாடாளுமன்ற மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி வருகிற மார்ச் 5–ந் தேதி காஞ்சீபுரம் மாவட்டம் கரசங்கால் பகுதியில் நடைபெற உள்ள தமிழ்நாடு காங்கிரஸ் கிராமக் கமிட்டி நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்க இருப்பதாக காங்கிரஸ் வட்டாரத்தில் உறுதியாக கூறப்படுகிறது.

இந்த சூழலில் ராகுல் காந்தி, நடிகர் விஜய்யுடன் இணைந்து செயல்பட பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. மார்ச் முதல் வாரத்தில் இது குறித்த முக்கிய அறிவிப்புகள் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. விஜய், காங்கிரசுக்கு ஆட்சியில் பங்கு தரவும், 5 முதல் 6 அமைச்சரவை பதவிகள் வழங்கவும், மேலும் பல பொறுப்புகளை வழங்கவும் தயாராக இருப்பதாக கூறப்படுகிறது.

விஜய்யின் கட்சி காங்கிரசுக்கு 100 இடங்கள் வரை கூட வழங்கலாம் என்றும் கூறப்படுகிறது. இது காங்கிரசை பலப்படுத்தும் ஒரே வழி என்று ராகுல் காந்தி கருதுவதாக தெரிகிறது. இதற்கு இணையாக தி.மு.க.வும் சலுகையை வழங்க வேண்டும் என ராகுல் காந்தி எதிர்பார்ப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பயணங்களின்போது செல்போனில் அதிக சத்தத்துடன் பாடல் கேட்டால் அபராதம் - ரெயில்வே நடவடிக்கை!



சென்னை, பிப். 26–

நாடு முழுவதும் தினமும் கோடிக்கணக்கான மக்கள் ரெயில்களை பயன்படுத்துகின்றனர். ரெயில்களை பொறுத்தவரையில், குடும்பமாக, நண்பர்களாக, தனிநபராக என பலரும் தங்களுக்கு ஏற்றவாறு பயணம்செய்து வருகின்றனர். ரெயில் பயணத்தின்போது கூச்சலிடுவது, அதீத சத்தமாக பேசுவது, செல்போனில் சத்தமாக பாடல்களை கேட்பது உள்ளிட்டவைகள் வாடிக்கையாக இருந்து வருகிறது. இதனால் மற்ற பயணிகள் முகம் சுழிக்கும் சம்பவங்களும், பல்வேறு பிரச்சினைகளும் ஏற்படுகிறது. இதுகுறித்து ரெயில்வே பாதுகாப்புப் படையினர் கூறும்போது, "ரெயில்களில் பயணம் மேற்கொள்ளும்போது, பயணிகள் மூலம் சக பயணிகளுக்கு இடையூறு ஏற்படும் பட்சத்தில், ரெயில்வே பணியாளர்களிடம் அல்லது ரெயில்வே பாதுகாப்பு படையினரிடம் நேரடியாகவோ அல்லது 'ரெயில் மதத்' செயலி மூலமாகவோ புகார் அளிக்கலாம். புகாரின்பேரில் அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு, அபராதம் விதிக்கப்படும். இந்த அபராதத் தொகையை அவர்கள் கோர்ட்டில் செலுத்த வேண்டியிருக்கும். எனவே, பயணிகள் ஒருவர், மற்றொருவருக்கு இடையூறு ஏற்படாத வகையில் தங்கள் பயணங்களை மேற்கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தனர்.

# தமிழ்நாட்டில் NDA கூட்டணி ஆட்சி... பா.ஜ.க.வில் இருந்து 20 அமைச்சர்கள் - இ.பி.எஸ்.க்கு செக் வைத்த நயினார்!



சென்னை, பிப். 26–

சென்னை அமைந்தகரையில் நடைபெற்ற பா.ஜ.க. பணிமனை திறப்பு விழாவில் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* சட்டசபை தேர்தல் பிரசாரத்திற்காக மார்ச் 1–ந்தேதி பிரதமர் மோடி தமிழ்நாடு வருகிறார்.
* பிரதமர் மோடி தமிழ்நாடு வந்து சென்ற பின்னரே அ.தி.மு.க.வுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும்.
* பிரதமரின் தமிழக வருகைக்கு பின்னர் எடப்பாடி பழனிசாமியிடம் கலந்து பேசி அதன்பின் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நடத்தப்படும்.
* தமிழ்நாட்டில் வெகு விரைவில் தேசிய ஜனநாயகக்கூட்டணி ஆட்சி மலரும்.
* எம்.ஜி.ஆர். வழியில் மக்களுக்கான கட்சியாக பா.ஜ.க. செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.
* பா.ஜ.க. கட்சியில் இருந்து 20–க்கும் மேற்பட்ட அமைச்சர்கள் வருவார்கள்.

மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் நாளை தமிழகம் வர உள்ளதாகவும், நாளை அ.தி.மு.க.வுடன் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நடக்கும் என்று வெளியான தகவலுக்கு அவர் மறுப்பு தெரிவித்தார். சில நாட்களுக்கு முன்பு சென்னையில் நடைபெற்ற India Today கருத்தரங்கில் பேசிய எடப்பாடி பழனிசாமி, "NDA கூட்டணி யில், ஆட்சியில் பங்கு என்ற பிரச்சனை யே இல்லை. கூட்டணியில் இருப்போரும் அவ்வாறு கேட்கவில்லை" என்று தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசுப் பேருந்துகளில் இனி பாடல்கள் ஒலிக்க தடை..!! போக்குவரத்துத் துறை அதிரடி உத்தரவு..!!




சென்னை, பிப். 26–

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகப் பேருந்துகளில் இனி பாடல்கள் மற்றும் ரேடியோ சத்தங்கள் ஒலிக்கக் கூடாது என அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில், "அரசுப் பேருந்துகளில் எக்காரணம் கொண்டும் ரேடியோக்களோ அல்லது டேப் ரெக்கார்டர் போன்றஒலிபரப்புகருவிகளோ பயன்படுத்தப்படக் கூடாது" எனத் திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவை மீறி செயல்படும் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் மீது துறை ரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

அரசின் இந்த முடிவானது பேருந்து பயணச் சூழலை அமைதியானதாக மாற்றுவதுடன், ஓட்டுநர்கள் முழு கவனத்துடன் வாகனத்தை இயக்கவும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக முதியவர்கள், நோயாளிகள் மற்றும் மாணவர்கள் மத்தியில் அரசின் இந்த அதிரடி தடைக்கு மிகுந்த வரவேற்பு கிடைத்துள்ளது. இனி அரசுப் பேருந்து பயணம் இரைச்சல் இல்லாத, அமைதியான பயணமாக அமையும் எனப் போக்குவரத்துத் துறை நம்பிக்கை தெரிவித்துள்ளது.

# தமிழ்நாட்டில் தனியார் பால் , தயிர் விலை தாறுமாறு உயர்வு..!!



சென்னை, பிப். 26–

தமிழ்நாட்டில் பால் உற்பத்தி சரிவடைந்துள்ளதை சாதகமாக்கி, தனியார் பால் நிறுவனங்கள் விற்பனை விலையை அதிரடியாக உயர்த்தியுள்ளன. கடந்த இரண்டு மாதங்களாக நிலவும் உற்பத்தி தட்டுப்பாட்டினால் ஆவின் நிறுவனம் அண்டை மாநிலமான கர்நாடகாவின் 'நந்தினி' பாலிடம் கையேந்தும் நிலை உருவாகியுள்ளதாக கூறப்படுகிறது. இந்த சூழலை பயன்படுத்திக் கொண்ட தனியார் நிறுவனங்கள், கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கி வருவதுடன், அந்த சுமையை நுகர்வோர் தலையில் சுமத்தியுள்ளன. தமிழ்நாட்டின் முன்னணி நிறுவனமான ஆரோக்யா, பால் மற்றும் தயிர் விலையை லிட்டருக்கு 2 ரூபாய் உயர்த்தியுள்ளதை தொடர்ந்து, பிற தனியார் நிறுவனங்களும் விலையேற்றப் பாதையில் பயணிக்கத் தொடங்கியுள்ளன. இதன் விளைவாக, ஒரு லிட்டர் கொழுப்பு சத்து செறிவூட்டப்பட்ட பால் 78 ரூபாயாகவும், டீ ஸ்பெஷல் பால் 70 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது. அதேபோல், நிலைப்படுத்தப்பட்ட பால் 68 ரூபாய்க்கும், சமன்படுத்தப்பட்ட பால் 62 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றன. தயிர் விலையும் கிலோவிற்கு 2 ரூபாய்வரை உயர்ந்துள்ளதால், இல்லத்தரசிகள் அதிர்ச்சியில் உள்ளனர்.

தற்போது கோடை காலம் தொடங்குவதற்கு முன்னரே பால் உற்பத்தியில் தொய்வு ஏற்பட்டுள்ளதால், வரும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் தட்டுப்பாடு இன்னும் மோசமடையும் என அஞ்சப்படுகிறது. தனியார் நிறுவனங்கள் லிட்டருக்கு 14 ரூபாய் வரை கொள்முதல் விலையை உயர்த்தி வழங்குவதால், கறவை மாடு வளர்ப்போர் ஆவினுக்குப் பால் வழங்குவதை குறைத்துத் தனியாரை நோக்கிச் செல்லும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது பொது விநியோக முறையில் இயங்கும் ஆவின் பால் விநியோகத்தையும் பாதிக்கக்கூடும் என தெரிகிறது.

# 8 ஆம் வகுப்பு சமூக அறிவியல் புத்தகத்தில் இருந்து நீதித்துறை ஊழல் என்ற பகுதியை நீக்க NCERT முடிவு..!





சென்னை, பிப். 26–

8 ஆம் வகுப்பு சமூக அறிவியல் புத்தகத்தில் இருந்து 'நீதித்துறை ஊழல்' என்ற பகுதியை NCERT நீக்கும் என்று தகவல்கள் தெரிவித்தன. இதற்குக் காரணமான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருகிறது என்றும் கூறப்படுகிறது.. NCERTயின் 8 ஆம் வகுப்பு சமூக அறிவியல் புத்தகத்தில் "நீதித்துறை ஊழல்" என்ற அத்தியாயம் சேர்க்கப்பட்டதை உச்ச நீதிமன்றம் முன்பே தானாக முன்வந்து விசாரித்துள்ளது.

# வேலை வாய்ப்பு

## எய்ம்ஸ் நர்சிங் 2,551 காலியிடங்கள்




நிறுவனத்தின் பெயர்: அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம்

அறிவிப்பு எண்: 17/2026 தேதி: 24.02.2026

வேலை வகை: மத்திய அரசு வேலைகள்

வேலைவாய்ப்பு வகை: வழக்கமான அடிப்படை

மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 2551 நர்சிங் அதிகாரி ஆட்சேர்ப்பு பொது தகுதித் தேர்வு (NORCET) 10 பதவிகள்

பணியிடப்படும் இடம்: இந்தியா முழுவதும்

தொடக்க தேதி: 24.02.2026

கடைசி தேதி: 16.03.2026 மாலை 05.00 மணி

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: www.aiimsexams.ac.in

# மார்ச் மாதத்தில் வங்கிகளுக்கு மொத்தம் எத்தனை நாட்கள் விடுமுறை.?





சென்னை, பிப். 26–

2026–ஆம் ஆண்டின் மார்ச் மாதம், ஆன்மீகம் மற்றும் கலாச்சாரப் பண்டிகைகள் நிறைந்த மாதமாக திகழ்கிறது. ஹோலி, ரமலான், ராம நவமி மற்றும் மகாவீர் ஜெயந்தி என அடுத்தடுத்து வரும் விழாக் காலங்களால், நாடு முழுவதும் உள்ள வங்கிகளுக்குப் பல நாட்கள் விடுமுறை அளிக்கப்பட உள்ளது. இதனால், இந்த விடுமுறை நாட்காட்டியை முன்கூட்டியே அறிந்து கொள்வது அவசியமாகிறது.

மார்ச் மாதத்தின் முதல் வாரத்தில் ஹோலி பண்டிகையை முன்னிட்டு வட மாநிலங்களில் வங்கிகள் மூடப்படும். தமிழகத்தைப் பொறுத்தவரை, மார்ச் 19–ஆம் தேதி உகாதி பண்டிகைக்காக சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் வங்கிச் சேவைகள் பாதிக்கப்படும். அதனைத் தொடர்ந்து, மார்ச் 20–ஆம் தேதி ரமலான் பெருநாளை முன்னிட்டு கேரளா மற்றும் ஜம்மு–காஷ்மீர் மாநிலங்களில் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மார்ச் 26 மற்றும் 27 ஆகிய தேதிகளில் ராம நவமி விழாவைக் கொண்டாடும் வகையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வங்கிகள் செயல்படாது. மாதத்தின் இறுதி நாளான மார்ச் 31–ஆம் தேதி, மகாவீர் ஜெயந்தியை முன்னிட்டு சென்னை, மும்பை, டெல்லி உள்ளிட்ட பெருநகரங்களில் வங்கிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.




## உதய்ப்பூரில் கோலாகலமாக நடைபெற்ற விஜய் தேவரகொண்டா- ராஷ்மிகா திருமணம்!



தெலுங்கு நடிகர் விஜய் தேவரகொண்டாவுக்கும் நேஷனல் கிரஷ் என்று வர்ணிக்கப்படும் ராஷ்மிகா மந்தனாவுக்கும் இன்று காலை திருமணம் கோலாகலமாக நடைபெற்றது.

நடிகர் விஜய்தேவரகொண்டா –ராஷ்மிகா காதல் திருமணம் உதய்ப்பூரில் உள்ள நட்சத்திர ஆடம்பர ரிசார்ட்டில் நடைபெற்றது. இவர்களின் திருமணம் இன்று காலை 10.10 மணிக்கு பாரம்பரிய சடங்குகளின் படி குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்கள் புடைசூழ கோலாகலமாக நடைபெற்றது.

திருமணத்திற்காக விஜய் தேவரகொண்டா– ராஷ்மிகா குடும்பத்துடன் சில தினங்களுக்கு முன்பு ஐதராபாத்தில் இருந்து உதய்ப்பூர் புறப்பட்டு சென்றனர். திருமணத்திற்கு முந்தைய கொண்டாட்டங்கள் நேற்றுமுன்தினம் முதல் தொடங்கி நடைபெற்றது.

இருப்பினும் அதிகாரப்பூர்வ விஜய் தேவரகொண்டா–ராஷ்மிகா திருமண புகைப்படங்களுக்காக ரசிகர்கள் காத்துக்கொண்டு இருக்கிறார்கள்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.


Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881



# தலைமை தேர்தல் கமிஷனர் சென்னையில் ஆலோசனை!



சென்னை, பிப். 26–

சென்னை வந்துள்ள தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார் உள்ளிட்ட அதிகாரிகள் இன்று அரசியல் கட்சி களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அதிகாரி களுடன் ஆலோசனை நடத்த உள்ளனர்.

தமிழகத்தில் விரைவில் சட்டசபை தேர்தல் நடக்க வுள்ளது. தேர்தல் ஏற்பாடுகளை ஆய்வு செய்ய தலைமை தேர்தல் அதிகாரி ஞானேஷ் குமார் தலைமையில் ஏழு பேர் குழுவினர் நேற்று காலை டில்லியில் இருந்து சென்னை வந்தனர்.

பின் புதுச்சேரி சென்று அம் மாநிலத்தில் செய்யப்பட்டுள்ள தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்தனர். இதை தொடர்ந்து சென்னை திரும்பியுள்ள அதிகாரிகள் பிப். 26–ல் காலை எம்.ஆர்.சி., நகரில் உள்ள நட்சத்திர ஓட்ட லில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் தேர்தல் தொடர்பாக கருத்து க்களை பெறவுள்ளனர்.

மாலையில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், கலெக்டர்கள், எஸ்.பி.,க்கள், கமிஷனர்கள் உள்ளி ட்டோருடன் ஆலோசனை நடத்தவுள்ளனர். விரிவான தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாக ஆய்வு செய்யவுள்ளனர்.

இதை தொடர்ந்து நாளை சி.பி.ஐ., அமலாக்கத் துறை, வருமான வரித் துறை உள்ளிட்ட மத்திய அரசின் 23 துறை உயர் அதிகாரி களுடன் ஆலோசனை நடத்துகின்றனர்.

# இனி, திருப்பதியில் புதிய கட்டுப்பாடுகள்.. அரசு எடுத்த அதிரடி முடிவு!



திருப்பதி, பிப். 26–

உலகப் புகழ்பெற்ற ஆந்திர மாநிலம் திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்குத் தினமும் லட்சக்கணக்கானப் பக்தர்கள் செல்கின்றனர். இந்த நிலையில், ஆந்திரப் பிரதேச முதல்வர் என். சந்திரபாபு நாயுடு, திருமலை திருப்பதி தேவஸ்தான ங்களுக்கு ஒரு சிறப்புச் சட்டத்தை இயற்றுவது குறித்து பரிசீலித்து வருவதா கக் கூறப்படுகிறது. இது அமிர்தசரஸ் பொற்கோயிலை நிர்வகிக்கும் சட்டத்தைப் போன்றது. பல அறிக்கை களின்படி, முன்மொழியப்பட்ட சட்டம் கோயில் விதிகள் மற்றும் விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அதிகரித்த அதிகாரங்களை வழங்கும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானங்களுக்கு கலப்பட நெய் விநியோகிக்கப்படுவதாக எழுந்த சர்ச்சையைத் தொடர்ந்து, இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க கடுமையா ன விதிமுறைகளை அறிமுகப்படுத்த ஆந்திர அரசு திட்டமிட்டுள்ளது. தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்திய அரசாங்கம், பக்தர்களின் நம்பிக்கை மற்றும் உணர்வுகளை சமரசம் செய்யும் எந்தவொரு செயலையும் பொறுத்துக்கொள்ளாது என்று வலியுறுத்தியது. அதன்படி தரிசனத்திற்கு செல்லும் பக்தர்கள் ஸ்கேனிங் மையம் அருகே உள்ள புத்தகத்தில் கையெழு த்திட்ட பிறகுதான் தரிசன த்திற்கு அனுமதிக்கப்படு வார்கள். மேலும், இதேபோல் இந்து மதத்தை சாராத மாற்று மதத்தினர்கள் தரிசனம் செய்ய விரும்பினால் கட்டாயம் அவர்கள் இந்து கடவுளை நம்புகிறோம். இந்து கடவுள் மீது நம்பிக்கை வைத்துள்ளோம். நாங்கள் பொட்டு வைத்துக் கொள்கிறோம் என உறுதிமொழி கடிதம் எழுதிக் கொடுத்த பிறகு தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

திருப்பதி கோயில்புதிய தலைமுறை:

அதே போல் தரிசனத்திற்கு செல்லும் மாற்று மதத்தினர் கட்டாயம் நெற்றியில் நாமம் போட்ட பிறகு தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இனிமேல் இந்த விதிகளை கண்டிப்பாக அமல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. திருமலை கோயிலின் புனிதத்தைப் பாதுகாக்க ஆந்திர அரசு இந்த உத்தரவுகளை பிறப்பித்தது. இதற்கிடையே, பொற்கோயில் சட்டத்தை ஆய்வு செய்த பிறகு, அரசாங்கம் சட்டமன்றத்தில் ஒரு மசோதாவை அறிமுகப்படுத்தும். மசோதா நிறைவேற்றப்பட்ட பிறகு புதிய சட்டம் அமலுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நல்லகண்ணு உடலுக்கு நடிகர் ரஜினிகாந்த், பிரேமலதா, வாசன் உள்ளிட்டோர் நேரில் அஞ்சலி!

சென்னை, பிப். 26–

சுதந்திர போராட்ட வீரரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவருமான நல்லகண்ணு (வயது 101). எளிமை யின் அடையாளமாக கருதப்பட்ட நல்லகண்ணு, சென்னை யில் குடும்பத்துடன் வசித்து வந்தார்.

கடந்த ஆண்டு (2025) மே மாதம் 9–ந்தேதி திடீரென நல்ல கண்ணு தனது வீட்டில் தவறி விழுந்தார். இதில் காயம் அடைந்த அவரை குடும்பத்தினர் சென்னை ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். சிகிச்சைக்கு பின்னர் அவர் மாலை யில் வீடு திரும்பினார்.

இதனையடுத்து அடிக்கடி உடல்நலக்குறைவு காரணமாக நல்லகண்ணு அவ்வப்போது ராஜீவ் காந்தி அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார். இந்தநிலையில் கடந்த 1–ந் தேதி மீண்டும் சிகிச்சைக்காக அவர் சென்னை ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார். ஆஸ்பத்திரியில் தொடர் சிகிச்சையில் இருந்த அவருக்கு கடந்த 23–ந் தேதி உடல்நி லையில் திடீரென பின்னடைவு ஏற்பட்டது. இதனையடுத்து. அவருக்கு 'வெண்டிலேட்டர்' உத வியுடன் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்தநிலையில், ம.தி.மு.க. முதன்மை செயலாளர் துரை வைகோ. இந்திய கம்யூனிஸ்டு கட்சி தேசிய பொதுச்செ யலாளர் டி.ராஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயலாளர் சண்முகம், தமிழ்நாடு நாடார் சங்கத்தலைவர் முத்து ரமேஷ் நாடார். முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி சகாயம், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா மற்றும் எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநில தலைவர் நெல்லை முபாரக், நடிகர் செந்தில், இயக்குனர் கவு தமன் உள்ளிட்டோர் நல்லகண்ணு உடல்நலம் குறித்து நேரில் வந்து நேற்று நலம் விசாரித்து வந்தனர்.

இந்தநிலையில், அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நல்லகண்ணுவின் முக் கிய உடல் உறுப்புகள் செயலிழப்பு உள்ளிட்ட காரணங்களால் உயிரிழந்துவிட்டதாக நேற்று மதியம் ஆஸ்பத்திரி நிர்வாகம் அறிவித்தது.

நல்லகண்ணு உயிரிழந்த செய்தி அறிந்ததும், மத்திய மந்திரி எல்.முருகன், தமிழக பா.ஜனதா தலைவர் நயினார் நாகேந்திரன், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப் பாளர் சீமான், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை, விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் உள்ளிட்டோர் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்தினர்.

இதனையடுத்து உடனடியாக நல்லகண்ணுவின் உடல் 'எம்பாமிங்' செய்யப்பட்டது. பின்னர், ஆஸ்பத்திரியில் இருந்து தியாகராயநகரில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகமாக பாலன் இல்லத்திற்கு தொண்டர்கள்



புடைசூழ நல்லகண்ணுவின் உடல் ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லப்பட்டது. அங்கு பொதுமக்கள் மற்றும் தொண்டர்கள் அஞ்சலிக்காக நல்லகண்ணுவின் உடல் இன்று மாலை 3 மணி வரை வைக்கப்படுகிறது. இதற்கிடையே நல்லகண்ணுவின் உடலுக்கு அரசு மரியாதை வழங்கப்படும் என முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

பொதுமக்களின் அஞ்சலி மற்றும் அரசு மரியாதைக்கு பின்னர் நல்லகண்ணுவின் உடல் ஊர் வலமாக சென்னை மருத்துவக்கல்லூரிக்கு கொண்டு செல்லப்படுகிறது. அங்கு அவருடைய உடல் மருத்துவ கல்லூரிக்கு தானமாக வழங்கப்படுகிறது என இந்திய கம்யூனிஸ்டு கட்சி தெரிவித்தது. மேலும், ஒரு வாரத்திற்கு கட்சியின் கொடி அரை கம்பத்திற்கு பறக்கவிடப்படும் எனவும் கூறியுள்ளது.

தியாகராயநகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தலைமை அலுவலகத்தில் வைக்கப் பட்டுள்ள நல்லகண்ணுவின் உடலுக்கு முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதல்–அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் சேகர்பாபு எ.வ.வேலு, மற்றும் எம்.பி. ஆ.ராசா உள்ளிட்டோர் நேற்று மாலை நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

மேலும், நல்லகண்ணுவை இழந்து வாடும் அவருடைய குடும்பத்தினர் மற்றும் கட்சி நிர்வாகி கள், தொண்டர்களிடம் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் கூறினார். இதேபோல் நல்லகண்ணு உடலுக்கு த.வெ.க. தலைவர் விஜய் நேற்று இரவு நேரில் அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து அரசியல் கட்சி தலைவர்கள், சினிமா பிரபலங்கள், கட்சி நிர்வாகிகள்,பொதுமக்கள் என நல்லகண்ணு உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர். இந்தநிலையில், நடிகர் ரஜினிகாந்த் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து மதிமுக பொதுசெயலாளர் வைகோ, தேமுதிக பொதுசெயலாளர் பிரேமலதா விஜயகாந்த்,அமைச்சர் அன்பில் மகேஸ், தமாக தலைவர் ஜி.கே.வாசன், இயக்குநர் வெற்றிமாறன், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், நடிகர் கார்த்தி,ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி பாலகிருஷ்ணன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

* இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் நல்லகண்ணு உடலுக்கு அஞ்சலி செலுத்திய பின் நடிகர் ரஜினிகாந்த் கூறியதாவது:–

நல்லவராக, நேர்மையாக இருந்தால் மதிப்பும், மரியாதையும் தானாக வரும் என்பதற்கு எடுத்துக்காட்டு நல்லகண்ணு என்றார்.

* இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் நல்லகண்ணு உடலுக்கு அஞ்சலி செலுத்திய பின் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா கூறுகையில்,

நல்லகண்ணு அய்யா மக்களுக்கு ஆற்றிய சேவையை போற்றும் வகையில் அவருக்கு பாரதரத்னா விருது வழங்க வேண்டும் என்றார். இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் நல்லகண்ணு உடலுக்கு அஞ்சலி செலுத்திய பின் ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி பாலகிருஷ்ணன் கூறுகையில், நூறு ஆண்டுகளுக்கு மேல் அவர் வாழ்ந்தார் என்பது நிறைவு அளிக்கிறது என்றார்.

* இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் நல்லகண்ணு உடலுக்கு அஞ்சலி செலுத்திய பின் அமைச்சர் அன்பில் மகேஸ் கூறுகையில்,

யாரும் வெறுக்க முடியாத மனிதர்; எளிமையின் மறுபெயர் என்றார்.

# மோடி–நெதன்யாகு பேச்சுவார்த்தை: இந்தியா–இஸ்ரேல் இடையே முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்து!



இஸ்ரேல், பிப். 26–

பிரதமர் மோடி 2 நாள் பயணமாக நேற்று இஸ்ரேலுக்கு சென்றார். அவரை பென்குரியன் விமான நிலையத்தில் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு நேரில் வரவேற்றார். பின்னர் ஜெருசலேமுக்கு சென்ற பிரதமர் மோடி அந்நாட்டு பாராளுமன்றத்தில் உரையாற்றினார். அப்போது பிரதமர் மோடிக்கு நெசெட் சபாநாயகர் விருது வழங்கப்பட்டது. இந்த விருதை மோடிக்கு இஸ்ரேல் பாராளுமன்ற சபாநாயகர் அமினர் ஒகானா அணிவித்தார். ஜெருசலேமில் நடந்த தொழில்நுட்பம் மற்றும் புதுமை கண்காட்சியில் மோடியும், நெதன்யாகுவும் கலந்து கொண்டு பார்வையிட்டனர். கண்காட்சிக்கு செல்வதற்கு இரு தலை வர்களும் ஒரே காரில் பயணம் செய்தனர்.

இஸ்ரேல் பயணத்தில் தனது 2–ம் நாளான இன்று பிரதமர் மோடி மதியம் யாத் வாஷேம் பகுதிக்கு சென்று அங்கு, நாஜிக்களால் கொல்லப்பட்ட யூதர்களை நினைவுகூரும் வகையில் அமைக்கப்பட்டுள்ள நினைவுச்சின்னத்தில் அஞ்சலி செலுத்துகிறார்.

இதைத்தொடர்ந்து இஸ்ரேல் அதிபர் ஐசக் ஹெர்சாக்கை சந்தித்து இரு தரப்பு பேச்சு நடத்துகிறார். அதன்பின் பிற்பகல் 2.40 மணிக்கு பிரதமர் மோடியும், இஸ்ரேல் பிரதமர் நெதன்யா குவும் தூதுக்குழுமட்ட பேச்சுவார்த்தை நடத்துகி றார்கள். இதில் பாதுகாப்பு ஒத்துழைப்பு இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம், சுதந்திர வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார ஈடுபாடு, புதுமை, வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகியவை குறித்து இரு தலைவர்களும் ஆலோசிக்கிறார்கள்.

இந்தியாவின் உள்நாட்டு வான் பாதுகாப்பு கேடயமான சுதர்சன் சக்ரா அமைப்புக்கு இஸ்ரேலின் அயன் டோம் வான் பாதுகாப்பு அமைப்பின் தொழில்நுட்பத்தை இந்தியா பெற பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. மேக் இன் இந்தியா முயற்சியின் கீழ் இந்த தொழில்நுட்பத்தை இந்தியாவுக்கு வழங்க இஸ்ரேல் முன்வந்துள்ளது. இது தொடர்பாக இரு தலைவர்களின் சந்திப்பில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படுகின்றன. மேலும் எதிரி ஆயுதங்களுக்கு எதிராக 'ஒளி–வேக' செலவு குறைந்த பாதுகாப்பை வழங்கும் இஸ்ரேலின் புதிய அயன் பீம் லேசர் அமைப்பை இந்தியா வாங்க விரும்பு கிறது. இது தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடக்கிறது.

இந்த சந்திப்பில் இந்தியா–இஸ்ரேல் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு, வர்த்தகம், முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகிறது. பேச்சுவார்த்தைக்கு பின் இரு தலைவர்களும் கூட்டு அறிக்கை வெளியிடு கிறார்கள். மாலை 4 மணிக்கு பிரதமர் மோடி இஸ்ரேலில் உள்ள இந்திய வம்சாவளி யினருடன் கலந்துரையா டுகிறார். பின்னர் மாலை 5.50 மணிக்கு மோடி இந்தியாவுக்கு புறப்படுகிறார்.

# தவெகவுக்கு சென்றவர்கள் அதிமுகவுக்கே திரும்ப தயார்! யாரைச் சொல்கிறார் வேலுமணி?



சென்னை, பிப். 26–

'கரூரில் 41 பேர் உயிரிழந்தா ர்கள், அவர்களைப் பார்க்கா மல் சென்னை சென்றவர் திரும்பி வரவே இல்லை. என்னவாக இருந்தாலும் மருத்துவமனைக்குச் சென்று பார்த்திருக்க வேண்டும்.

தனிப்பட்ட முறையில் விஜய் என்னுடைய நண்பர். ஒரு படத்தை வெளியிட வேண்டும் என்பதற்காக எனது வீட்டுக்கு வந்தார். எனது காரில் அழைத்துச் சென்று எடப்பாடி பழனிசா மியை சந்திக்க நான்தான் உதவினேன். ஆனால் மக்களுக்கு தலைவன் எனச் சொல்லிக் கொண்டு வரும்போது அவர்கள் உயி ரைக் காப்பாற்ற வேண்டும்.

அதிமுகவில் இருந்து தவெகவுக்குச் சென்ற வர்கள் மீ ண்டும் அதிமு கவுக்கு வருவதற்கு தயாராக இருக்கிறார்கள். மரியாதையோடு அதே பதவியைக் கொடுத்தால் வந்துவிடுவதாக கூறி யுள்ளார்கள். அதிமுகவில் கிடைக்கும் மரியாதை வேறு எந்தக் கட்சியிலும் கிடைக்கா து'' எனத் தெரிவித்துள்ளார்.

அதிமுக மூத்த தலைவராக இருந்த செங்கோட்டையன் மற்றும் அவரது ஆதரவாளர்கள் பலர் தவெகவில் இணைந்தனர். தற்போது தவெகவின் நிர்வாகப் பொதுச் செயலாளராகவும் செங்கோட்டையன் பதவி வகித்து வருகிறார்.

மேலும், சமீபத்தில் வடசென்னையைச் சேர்ந்த முன்னாள் எம்எல்ஏ வி.எஸ். பாபு, அதிமுக மூத்த தலைவர் தனபாலின் மகன் லோகேஷ் தமிழ்செல்வன் உள்ளிட்ட பலர் தவெகவில் இணைந்தது குறிப்பிடத்தக்கது.

# ஆண்டின் முதல் சந்திர கிரகணம்.. வானில் தோன்றும் 'ரத்த நிலவு' – எப்போது பார்க்கலாம்?



இந்த ஆண்டின் முதல் முழு சந்திர கிரகணம் வருகிற மார்ச் 3 அன்று நிகழ உள்ளது.

பூமி, சூரியனுக்கும் சந்திரனுக்கும் நேர்கோட்டில் வரும்போது பூமியின் நிழல் சந்திரனை மறைப்பதால் சந்திர கிரகணம் ஏற்படுகிறது.

இந்த கிரகணத்தின்போது சந்திரன் அடர் சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கும். இதனை ரத்த நிலவு (Blood moon) என்று அழைக்கின்றனர்.

முழு கிரகண நிலை சுமார் 58 நிமிடங்கள் நீடிக்கும். இது இந்திய நேரப்படி மாலை வேளையில் நிகழ்கிறது.

இந்தியாவில் சந்திரன் உதிக்கும் போதே கிரகணம் தொடங்கிவிடுவதால், நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கிரகணத்தின் இறுதி நிலையை மட்டுமே காண முடியும்.

மாலை 4:58 மணிக்கு தொடங்கும் நிழல் கிரகணம் முழு கிரகணமாக மாறும். மாலை 5:32 க்கு முழு கிரகணம் முடிவுக்கு வரும். இரவு 7:53 மணிக்கு கிரகணம் முழுவதுமாக முடிவுக்கு வரும்.


இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் சந்திரன் உதிக்கும் போது இந்த நிகழ்வு கிழக்கு அடிவானத்தில் தாழ்வாக தெரியும்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள திப்ருகார், திஸ்பூர், கௌவ்ஹாத்தி, ஷில்லாங், இட்டாநகர் உள்ளிட்ட சில நகரங்களில் முழு கிரகணத்தையும் காண முடியும்.

இங்கு மாலை 5:10 முதல் 5:25 மணிக்குள் கிரகணத்தின் உச்சக்கட்ட நிலையைத் தெளிவாகக் காணலாம்.

சூரிய கிரகணத்தைப் போலன்றி, சந்திர கிரகணத்தை வெறும் கண்களால் பார்ப்பது முற்றிலும் பாதுகாப்பானது. இதற்குச் சிறப்பு கண்ணாடிகள் தேவையில்லை.

# திராவிடக் கட்சிகளோடு கூட்டணி; பிப். 28–ல் அறிவிப்பு! – ராமதாஸ்!



சென்னை, பிப். 26–

திராவிடக் கட்சிகளோடு கூட்டணி இருக்கும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் அறிவிக்கப்படவுள்ளதையொட்டி கூட்டணி பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

பாமகவின் ராமதாஸ் தரப்பு இன்னும் கூட்டணி குறித்த அறிவிப்பை வெளியிடவில்லை.

இந்நிலையில் தைலாபுரத்தில் செய்தியாளர்களுடன் பேசும்போது. 'திராவிடக் கட்சிகளுடன் கூட்டணி இருக்குமா?' என்ற செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த ராமதாஸ், ''இருக்கும்'' என்று பதிலளித்தார்.

மேலும் அவர் பேசுகையில், ''கூட்டணி குறித்து இன்றே முடிவு செய்ய முடியாது. ஏனென்றால் அதற்கான களம் சரியாக அமையவில்லை. அதனால் நேரம் வரும்போது கூட்டணி குறித்து அறிவிப்பேன். நமக்கான தேர்தல் வாகனம் தயாராகிவிட்டது. வருகிற பிப். 28 ஆம் தேதி கூட்டணி குறித்த அறிவிப்பை வெளியிடுவேன்'' என்றும் கூறியுள்ளார்.

# லஞ்ச ஒழிப்புதுறை மீது அதிருப்தி: மதுரை காமராசர் பல்கலைக்கழக முறைகேடு குறித்து விசாரிக்க சி.பி.ஐக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு...!




மதுரை, பிப். 26–

பிரபலமான மதுரை காம ராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்று ஊழல் புகார் குறித்து விசாரித்த தமிழ்நாடு லஞ்ச ஒழிப்பு துறையினரின் விசாரணைமீது அதிருப்தி அடைந்த உயர்நீதிமன்றம் மதுரை களை, இந்த புகாரை சி.பி.ஐ மாற்றி, உத்தரவிட்டுள்ளது

பல்கலைக்கழகங்களில் ஊழல் என்பது ஏற்றுக் கொள்ள முடியாதது என்றும் இது எதிர்கால சந்ததியினரையும் பாதிக்கும் என்றும் , இந்த புகார் தொடர்பான வழக்கில், தமிழ்நாடு லஞ்ச ஒழிப்பு காவல்துறை, தனது கடமையை முறையாக செய்யவில்லை என்றும் நீதி பதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முறைகேடு நடந்துள்ளதாக அளிக்கப்பட்ட புகார் குறித்து சி.பி.ஐ விசாரிக்க சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை புதன்கிழமை உத்தரவிட்டது.

# மார்ச் 10-ந்தேதி முதல் வேளச்சேரி- பரங்கிமலை ரயில் சேவை! தெற்கு ரயில்வே அறிவிப்பு...!




சென்னை. பிப். 26–

மார்ச் 10ந்தேதி வேளச்சேரி பரங்கிமலை ரயில் சேவை தொடங்கப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவிப்பு வெளியிட்டு உள்ளது. ஏற்கனவே 2025 டிசம்பரில் பயன்பாட்டுக்கு வரும் என தெரிவிக்கப்பட்ட நிலையில், தற்போது வரும் மார்ச் 10ந்தேதி முதல் பயன்பாட்டுக்கு வரும் என அறிவிக்கப்பட்டு உள்ளது. இது ரயில் பயணிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

# கவுரவ விரிவுரையாளர்களுக்கு மார்ச் 1 முதல் சம்பளம் உயர்வு: அமைச்சர் கோவி. செழியன் அறிவிப்பு!



திருவிடைமருதூர், பிப். 26–

திருவிடைமருதூரில் செய்தியாளர்களி டம் பேசிய உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் கூறுகையில், ''கவுரவ விரிவுரையாளர்களுக்கு மார்ச் 1–ம் தேதி முதல் ஊதிய உயர்வு வழங்கப்படும் என அறிவித்தார். கவுரவ விரிவுரையாளர்கள் மார்ச் 1 முதல் மாதம் ரூ30,000 ஊதியம் பெறலாம். அரசு பாலிடெக்னிக் தற்காலிக விரிவுரையாளர்களுக்கு ரூ.20,000லிருந்து ரூ.25,0000ஆக உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் 9,646 ஆசிரியர்கள் பயனடைவார்கள் என அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்தார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020